# முரசொலி

பக்கங்கள் நான்கு    விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 59  ஆங்கீரச  சித்திரை 22 ( 04 . 05 . 1992 ) திங்கள்


## எதிரணி மேதினப் பேரணியில் கறுப்புப் பூனை வேடம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் எதிர்க்கட்சி கூட்டணி நடத்திய மேதினக் கூட்டத்திற்கு சுமார் ஐந்து இலட்சம் பேர் திரண்டதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இவர்களில் அநேகர் கூட்டணியினரின் கூட்டத்தில் என்ன நடக்கிறது என்பதை புதினம் பார்க்க சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது இதேவேளை எதிரணியினர் கூட்டாக நடத்திய பேரணியின் போது அரசின் படுகொலைப்படை எனக் குற்றஞ்சாட்டப்படும் கறுப்புப் பூனைகளை சித்தரிக்கும் வகையில் சிலர் கறுப்புப் பூனைகள் போன்று வேடமணிந்து வந்தமை பலரின் கவனத்தையும் ஈர்த்தது. இதே வேளை ஐ.தே.க.வினர் நடத்திய மேதினக் கூட்டத்தில் பல லஞ்சக்கணக்கானோர் திரண்டமைக்கு வட, தென் இந்திய கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளே காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது

# பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தீர்மானம் எடுக்க முடியாத நிலை!

## பிக்குகள் குழுவிடம் இணைப்பு குறித்து அரசு மௌனம்

இனப்பிரச்சினை தீர்வுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படவேண்டும் என்ற விடயத்தினால் பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானங்கள் ஏதும் எடுக்க முடியாத நிலையில் சர்வகட்சி மாநாடு போன்றே செயலிழந்து போகலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைக்கப்படுவது இன பிரச்சினை தீர்வின் முக்கிய அம்சம் என தமிழர் தரப்பில் வலியுறுத்தப்படுகிறது. எனினும் இணைப்பிற்கு ஐ.தே.க.வும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இதேவேளை பாம். வந்த பிக்குகள் குழுவின் திட்டத்தில் இணைப்பு குறித்து ஏதும் தெரிவிக்கப்படவில்லை

—04 ஆம்பக்கம் பார்க்க

## லொஸ் ஏஞ்சலில் 3 நாள்களின்பின் அமைதி

மூன்று நாள் இனவன்முறைகளுக்கு பின் நேற்று லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் அமைதியாக காணப்பட்டது

சேதமான பகுதி என ஜனாதிபதி புஸ் லொஸ் ஏஞ்சல்ஸை பிரகடனப்படுத்தியதை யடுத்து அங்கு இராணுவத்தினரும் கடற்படையினரும் துப்பாக்கிகள் சகிதம் ரோந்து வருகின்றனர்.

அமெரிக்காவின் 2வது பெரிய நகரமான லொஸ

...04 ஆம் பக்கம் பார்க்க

## ஊரடங்கு நீக்கம்

மன்னார் மாவட்டத்தில் அமுலிலிருந்த ஊரடங்கு நேற்று நண்பகலுடன் நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## தமிழீழ மீட்புநிதி கடன் மீளல்

தமிழீழ மீட்புநிதிக்கு கடன் வித்தோரில் தேர்ந்தெடுக்கப்பட்ட 536 பேரின் கடன் மீள்ளிப்பு இம்மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெறும்.

தேர்ந்தெடுக்கப்பட்டோரின் விவரம் நாளை வெளிவரும்.

## மட்டக்களப்பிலும் வெளிவாரி பரீட்சை

இதுவரை காலமும் பேராதனை பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்டுவந்த வெளிவாரி பட்டப் படிப்பு முதல் தேர்வுக்கான பரீட்சைகள் அடுத்த ஆண்டிலிருந்து மட்டக்களப்பு பல்கலைக் கழகத்திலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன. 09

## புல்லுமலையில் பொதுமகன் படையினரால் வெட்டிக்கொலை

மட்டக்களப்பில் புல்லுமலை கொலனியை சுற்றிவளைத்த படையினர். ஒருவரை கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றனர்

நான்கு இராணுவ முகாம்களில் இருந்து வந்த படையினர் இக்கிராமத்தை சுற்றிவளைத்தனர். சரவணை என்றவரை வெட்டிக் கொன்ற படையினர் மேலும் 10பேரை முகாமிற்கு இழுத்துச் சென்றனர். 10

## கறுககாய்தீவில் நெல்மூடைகள் பாதுகாப்பு அரண்களாக

பூநரி கறுக்காய்தீவில் நெல் மூடைகளும் இராணுவ காவலரண்களில் பாதுகாப்பு அரண்களாக அடுக்கப்பட்டிருந்தன.

கறுக்காய்தீவிலிருந்த படையினர் அங்கிருந்து வாபஸான பின்னர் அப்பகுதிக்கு சென்ற மக்கள் இதைக்கண்டனர்

கறுக்காய்தீவில் நிலைகொண்டிருந்த படையினர் கடந்த மாதம் வாபஸ்பெற்று சென்றமை தெரிந்ததே. 49

## ஆப்கான் ஆட்சி மாற்றம் பி. ஜே. பி. அச்சம்

ஆப்கானிஸ்தானில் மூஜாகுதீன் கெரில்லாக்கள் ஆட்சி ... டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் குறிப்பிடப்

## ★ மட்டு அம்பாறை அரசியல் பொறுப்பாளர் விசு

# கிழக்கிலும் இசைவிழா நடத்தும் சூழ்நிலையை உருவாக்குவோம்

தென் தமிழீழத்தில் இருந்து எந்தக் கலைஞர்களும் இவ் இசை விழாவில் பங்குபற்றாமை எமக்கு வேதனையைத் தருகிறது தென் தமிழீழ மக்கள் பல நெருக்கடியான சூழ்நிலையில் உயிரைப் பிடித்து மிகவும் கஷ்டத்துடன் அங்கு வாழ்க்கை நடாத்துகிறார்கள் மும்முனைத் தாக்குதல்களுக்கு மத்தியில் அவர்கள் வாழ்கிறார்கள். வரய்திறந்து பேச முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர் முஸ்லீம் காடையர்கள் ஒருபுறமும் இராணுவ அடக்குமுறைமறுபுறமும், இவைகளின் ஆக்கிரமிப்புக்கு மத்தியில் அவர்கள் தென் தமிழீழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இவ்வாறு நேற்று தமிழிசை விழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. விசு அவர்கள் குறிப்பிட்டார்.

தமிழீழக் கலைஞர்களை விடுதலைப் புலிகளாகவே நாம் மதிக்கிறோம் 'இந்தமண்ணை கூடிக்காக்க விடுதலைப்புலி களாகிய நாம் ஆயுதம் ஏந்திப் போராடுகிறோம் தமிழீழக் கலைஞர்கள் தமிழர் இசையை, பண்பாட்டைக் காப்பவர்கள்,

...04 ஆம் பக்கம் பார்க்க

## ★ யாழ்மாவட்ட தளபதி செல்வராசா

# சிறுவர்களும் பாடக்கூடியவாறு சிறந்த படைப்புகள் உருவாகின

...ஆப்கானிஸ்தானின் ஆட்சி குதிர் கெரில்லாக்கள் ஆட்சியை கைப்பற்றியமை இந்தியாவில் உள்ள முஸ்லீம் தீவிரவாதிகளுக்கு உற்சாகமளிக்கலாம்.

இவ்வாறு நேற்று ஆரம்பமான மூன்று நாள் பாரதி ஜனதா கட்சி தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீர்மானத்தில் இந்திய தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் நிதி, ஆயுத உதவிகள் வழங்குவதற்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

## முன்னாள் ஆப்கான் அதிகாரிகள் பழிவாங்கப்படுகின்றனர்?

ஆப்கானிஸ்தானின் முன்னாள் பிரதம நீதியரசர் இனந் தெரியாதவர்களால் சுடப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். இவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டது. நேற்று முன்தினமிரவு இவரை மூன்று இனந் தெரியாத நபர்கள் கடத்திச் சென்றிருந்தனர்.

இதே சமயம் முன்னாள் விமானத் துறையமைச்சரும் இனந் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

...றார்கள். வாய்திறந்து பேச ... டக்களப்பு அம்பாறை மாவட்...

## இசை மனிதனது உணர்வை தட்டியெழுப்பக் கூடியது

**- சி. வி. கே. சிவஞானம்**

"கலைஞன் எதற்கும் துணிவு நேர்மை வீரமானவனாக இருக்கவேண்டும் மறைவு தேடக்கூடாது ஒரு கலைஞன் தூரநோக்குடன் தமது படைப்புக்களை படைக்கவேண்டும் நீண்ட போராட்டம் தமிழீழத்தில் நடந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில் கலைஞர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே குருசிஷ்ய உறவு இருக்கவேண்டும். இத் தமிழீழ அரசு வேண்டுகைகளினால் உருவானது இவ் அரசில் ஈழ் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டு இயக்கம் உருவாகி கலைஞர்களுக்கும் அரசுக்குமிடையே உறவை வளர்ப்பது மிகவும் சிறப்பானதே" என நேற்றைய தினம் தமிழிசை விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய யாழ் மாநகரசபை முன்னைநாள் ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் சிறப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சிறந்த படைப்புகள் உருவாகின

"இம்மண்ணில் தியாகங்கள் அர்ப்பணிப்புக்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவைமறை காய்களாக உள்ள எமது கலைஞர்கள் இப்போராட்டத்தைச் சித்தரிக்கும் பல நிகழ்ச்சிகளை கலையில் வடிக்க முன்வர வேண்டும்" என நேற்று தமிழிசை விழாவில் சிறப்புரை நிகழ்த்திய யாழ் மாவட்ட தளபதி திரு. செல்வராஜா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

முன்னைய நாள்களில் எமது சிறுவர்கள் அம்மா நான் விளையாடப் போகிறேன் என்ற பாடல்களைப் பாடினார்கள் ஆனால் இன்று

...04 ஆம் பக்கம் பார்க்க

**நல்லூரில் தமிழிசைவிழா**

**02-05-1992 - 06-05-1992**

## உண்மையை தரிசிப்பதற்கு..

"உண்மை பரம்பொருள் என்பதைத் தவிர இந்த உலகில் நிரந்தரமானது ஏதும் இல்லை. குழந்தையாகப் பிறந்து வாலிபனாக வளர்ந்து வயோதிபர்களாக மாள்கிறோம். பருவ காலங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன. நேற்றுடன் ஒப்பிடும்போது இன்று புதிய நாள். இந்த உலகின் மாறுபடும் தன்மையை, ஏதோ ஒன்றை நோக்கி வளரும் தன்மையை நாம் புரிந்து கொள்ளவேண்டும் நம் செயல்கள் தான் நம் விதியை நிர்ணயிக்கின்றன என்பதை உணர்ந்து என்று செயற்படுகிறோமோ அன்றுதான் நாம் உண்மையைத் தரிசிப்போம்" மேற்கண்டவாறு தமிழகத்தின் பிரபல சிந்தனையாளர் டாக்டர் எம் என் உதயமூர்த்தி தமிழ் வார இதழ் ஒன்றில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் கூறியுள்ளார்.

# தமிழக சட்டசபை அவசரமாக இன்று கூடுகிறது

தமிழக சட்டப் பேரவை இன்று காலை பத்து மணிக்குக் கூடுகிறது. இந்த அவசர கூட்டத்திற்கான அறிவிப்பை சட்டப் பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா வெளியிட்டிருக்கிறார்.

சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் சென்ற மாதம் 28 ஆம் திகதி காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது நினைவிருக்கலாம். கோவை மாலை முரசு ஆசிரியர் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் சட்டப் பேரவைச் செயலாளர் இந்த மாதம் ஐந்தாம் திகதி தாம் கோரிய தவலுடன் ஆஜராக வேண்டுமென்று பாரத உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருப்பதன் பின்னணியில் பேரவையின் அவசர கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

சென்ற பேரவைக் கூட்டத் தொடரில் உச்ச நீதிமன்றம் அனுப்பும் எந்த தாக்கீதையும் பேரவைச் செயலர் வாங்கக்கூடாது என சட்டசபை சபாநாயகர் உத்தரவிட்டிருந்தார் என்பதும் நினைவிருக்கலாம்.

## கூட்டணியினர் மீண்டும் வட, கிழக்கு அரசியலுக்கு

தற்போது இந்தியாவில் இருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான எம் சிவசிதம்பரம், சம்பந்தன் ஆனந்தசங்கரி ஆகியோர் அடுத்த சில வாரங்களில் இலங்கை திரும்புவார்கள் எனக் கொழும்பிலுள்ள கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மூவரும் யாழ்ப்பாணம், திருமலை, கிளிநொச்சி ஆகிய தத்தமது பகுதிகளில் மீண்டும் கூட்டணி அரசியலில் ஈடுபடுவார்கள் எனவும் அறிக்கப்பட்டுள்ளது.

## கடவுச்சீட்டு விஸ்தரிப்பு நிறுத்தம்

மத்திய கிழக்கு கடவுச்சீட்டு சர்வதேச நாடுகளுக்கு விஸ்தரிப்பது நிறுத்தப்பட்டுள்ளது குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடவுச் சீட்டுகளைச் சகல நாடுகளுக்கும் செல்லத்தக்கதாக விஸ்தரித்து அத்தாட்சிப் படுத்தும் நடவடிக்கையை நிறுத்தியுள்ளதென அத் திணைக்களத்தின் பதில் கட்டுப் பாட்டாளர் அறிவித்துள்ளார்.

போதைவஸ்துக் கடத்தல் தொடர்பாக சர்வதேச பொலிஸார் இரகசிய பொலிஸ் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும் அறிக்கப்படுகிறது.

## சுதந்திரக் கட்சியின் தலைமைப்போட்டி பகிரங்கம்

சுதந்திரக் கட்சித் தலைமைக்கான அனுரா, சந்திரிகா சண்டை பகிரங்கமாகி விட்டது. கிரிலப்பனவில் ஆரம்பித்த கூட்டு மேதின ஊர்வலத்தில் சென்ற இரண்டு ஒலிபெருக்கி வாகனங்கள் இரண்டு பெயர்களையும் தனித்தனியாக அறிவித்தன.

இதனால் சுதந்திரக் கட்சித் தொண்டர்கள் மத்தியில் குழப்பமும் ஆச்சரியமும் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வெளிவாரி மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் இணையலாம்

பல்கலைக்கழகங்களில் வெளிவாரியாக பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுபவர்களை உள்வாரி மாணவர்களுடன் இணைத்துக்கொள்வதற்கான புதிய திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின்படி இனி மேல் மூன்று பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்று 180 புள்ளிகளுக்கு மேல் பெறும் வெளிவாரி மாணவர்கள் உள்வாரி மாணவர்களுடன் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(22)

## மண்டைதீவுக் கடலில் தொடர்ந்தும் தாக்குதல்

நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் மண்டைதீவுக் கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவரை நோக்கி இராணுவத்தினரும் கடற்படையினரும் பல தடவைகள் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர்.

இச் சமயத்தில் ஹெலிகொப்டர் ஒன்றும் கடற்பகுதியை வட்டமிட்டுச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை மண்டைதீவுச் சந்தியில் உள்ள இராணுவத்தினர் இரவு வேளைகளில் சிறுத்தீவுக்கும் மண்டைதீவுக்குமிடையில் உள்ள கடலில் படகுகளில் நடமாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் சிறுத்தீவுக்கரையிலும் இவர்கள் வந்து தங்கிச் செல்வதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். 15

## நெஸ்லே கம்பனியின் அறிவிப்பு 'பால்மா வகைகளில் பன்றிக்கொழுப்பு இல்லை'

நெஸ்லே கம்பனியின் உற்பத்திப்பொருள்களான நெஸ்பிறே, எவ்ரிடே, மில்க்மெயிட், லக்டோஜன், நெஸ்டம், செரிலக், நெஸ்டோமோல்ட், மைலோ, நெஸ்லே கிறீம், நெஸ்கபே, தேங்காய்ப் பால் பவுடர் என்பவற்றில் பன்றிக்கொழுப்புக் கலக்கப்படவில்லை என அக்கம்பனி அறிவித்துள்ளது.

இந்த பால்மா வகைகளில் பன்றிக்கொழுப்புக் கலக்கப்பட்டதாகப் பாராளுமன்றத்தில் கடந்தவாரம் அதாவுட செனவிரட்ண எம். பி. கூறியிருந்ததையடுத்து இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

## ரஷ்யத்தூதுக்குழு இந்தியா விஜயம்

பாரதத்தில் மூன்று நாள் சுற்றுப் பயணமாக ரஷ்யாவின் உயர் மட்டத் தூதுக்குழுவொன்று நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தது ரஷ்ய வெளியுறவு அமைச்சர் ஜீ. சுபுல்புலிஸ தலைமையில் பல அமைச்சர்கள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

1991 இல் செய்யப்பட்ட விண்வெளி தொழில் நுட்ப ஒப்பந்தம் பற்றி பாரதம் பயப்பட வேண்டியதில்லையென புல்புலிஸ் விமானநிலையத்தில் கூறினார், சோவியத் யூனியனின் சிதைவுக்குப் பின் இந்தியா வரும் முதலாவது உயர் நிலைத் தூதுக்குழு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் நலன் கருதி...

அராலி மேற்கு புங்கங்குளி நல்லொளி சனசமூக நிலையத்தினர் புங்கங்குளிக் கிராமத்தில் வசிக்கும் சிறுவர்களின் கல்வியை வளர்க்கும் நோக்கத்துடன் பாலர் பாடசாலை ஒன்றை விரைவில் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

இச் சனசமூக நிலையம் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி றாயினி கணேசரத்தினத்தால் திறந்துவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (18)

## கொள்ளையர் சிக்கினர்

நள்ளிரவு நேரத்தில் கடை ஒன்றின் கதவை உடைத்து உட்சென்ற கொள்ளையர் மூவர் அங்கிருந்த சுமார் மூப்பதினாயிரம் ரூபா பெறுமதியான பல பொருள்களை திருடிச் சென்றபோது சந்தேகத்தில் காவற்படையினரால் திருடிய பொருள்களுடன் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மூளாய் பிள்ளையார்கோவிலடியில் உள்ள ஒரு கடையிலேயே இத்திருட்டுச் சம்பவம் நிகழ்ந்தது. 18

## மனித உரிமை சம்பந்தமான நாடகப் போட்டிக்கு ஏற்பாடு

இலங்கை மன்றக் கல்லூரி பாடசாலை மாணவ மாணவியர்களுக்கிடையே மனித உரிமைகள் சம்பந்தமான அறிவினை மேம்படுத்தும் முகமாக நாடகப் போட்டியொன்றை நடத்த உத்தேசித்துள்ளது.

இப்போட்டி பற்றிய விவரங்கள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளன. (15)

## ஓராண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| மலர்வு: | உதிர்வு: |
| 30 | 16 |
| — | — |
| 12 | 04 |
| — | — |
| 1939 | 1991 |

அமரர் சின்னத்தம்பி தங்கராசா

## செய்தி உலகம்

### மேற்கு நைஜீரியா

உலகில் மேற்கு நைஜீரியாவிலுள்ள யோருபா என்ற வாழ்வாசி இனத்தில்தான் அதிகமான இரட்டையர்கள் பிறக்கிறார்கள் அங்கு பிறக்கின்ற குழந்தைகளில் 6 சதவீதம் இரட்டைக் குழந்தைகள் தான் - யோருபா இனத்தினருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்க ஒரு முக்கியமான காரணம் உண்டு என்று மருத்துவ நிபுணர்கள் கருதுகிறார்கள் இங்குள்ள பெண்கள் யாம் என்ற கிழங்கு வகையை அதிகமாக உண்பது தான் ஒரு காரணம் என்றும், இந்தக் கிழங்கு பெண்களின் உடலில் உள்ள சில ஹார்மோன்களைத் தூண்டி இரட்டைக் குழந்தைகளுக்கு வழி அமைத்து விடுகிறது என்றும் கூறுகிறார்கள்.

### அமெரிக்கா

ஒரே சமயத்தில் ஒரு கோடி இடங்களுக்கு செய்திகளைப் பரிமாறிக் கொள்ள லேசர் ஒளிக் கற்றையே உதவும் செய்தித் தொடர்பிற்காக 10/13 ஹெர்ட்ஸ் முதல் 10/16 ஹெர்

## அமரர் சின்னத்தம்பி தங்கராசா

திதி:-04-05-92

எந்தையே எம் தலைவா எங்கள் குலவிளக்கே
எம்மைப்பிரிந்து ஓராண்டாய் எங்கு சென்றீர்
தங்கள் பிரிவால் தளர்ந்து தவிக்கின்றோம்.
பாசமிகு நும் பணிகள் தண்ணிழலாய்த் தானமைந்து
என்றும் எம்மனதில் நிழலாகத்தான் தொடர்ந்து
தீராத துன்பமெல்லாம் தீர்த்திடுமே
உயிரினுமினிய உங்கள் நினைவோடு
இம்மாநிலத்தில் என்றும் வாழ்ந்திருப்போம் நினைத்திருப்போம்

தங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

62/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

05006


…யாளர்களிடையே மனித உரிமைகள் சம்பந்தமான அறிவினை மேம்படுத்து முகமாக இப்போட்டி பற்றிய விபரங்கள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளன. (15)

# கிளி. மாவட்டத்திலும் தொ. ஆசிரியர் சங்கம் அமைப்பு

தொண்டர் ஆசிரியர்கள் தமது விவரங்களை தொண்டர் ஆசிரியர் சங்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 5.5.92 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பட்டப்படிப்புகள் கல்லூரியில் இவ் விவரங்கள் தற்பொழுது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலும் தொண்டர் ஆசிரியர் சங்கமொன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்துடன் கிளிநொச்சி மாவட்ட சங்கமும் இணைந்து, தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே சமயத்தில் ஒரு கோடி இடங்களுக்கு செய்திகளைப் பரிமாறிக் கொள்ள லேசர் ஒளிக் கற்றையே உதவும். செய்தித் தொடர்பிற்காக 10/13 ஹேர்ட்ஸ் முதல் 10/16 ஹேர்ட்ஸ் வரை உள்ள அலை நீளங்களை உண்டாக்கினால் போதும் என்று அமெரிக்கா கண்டுபிடித்துள்ளது. ஒரு கோடி இடங்களிலிருந்தும் குறிப்பிட்ட இடத்திற்கு பலவேறு விதமான செய்திகளையும் இந்த லேசர் மூலம் அனுப்பிப் பதிலும் பெறலாமாம்.

## ஜப்பான்

ஜப்பானில் 'பியூஜி' என்ற மலை அடிவாரத்தில் உள்ள காட்டில் தற்கொலை செய்து கொள்வது சமீப காலத்தில் அதிகரித்துள்ளது. 1960 ஆம் ஆண்டு மிகப்பரபரப்பாக விற்கப்பட்ட ''செய்சி மாட்சுமோட்டோ'' என்ற நாவலில் அதன் கதாநாயகன் இந்தக் காட்டில் தற்கொலை செய்து கொள்வதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் இருந்து பலர் இந்தக் காட்டிற்கே வந்து தம் உயிரை மாய்த்துக் கொள்கிறார்களாம், இது அப்பகுதி பொலிசுக்கும் தீ அணைக்கும் படையினருக்கும் பெரும் தலையிடியாய் உள்ளது. 1991 ஆம் ஆண்டு மட்டும் இக்காட்டில் தற்கொலை செய்தவர்கள் எண்ணிக்கை 156 என்று தெரிவிக்கப்படுகிறது. 16

# உதவி பெறும் நாடுகள்
## ஆயுதகொள்வனவுக்கு அதிக செலவு

வளர்முக நாடுகள் உற்பத்தி நடவடிக்கைகளில் பணத்தைச் செலவிடாது ஆயுதக் கொள்வனவில் செலவிடுவதாக யப்பான் சுட்டிக்காட்டியுள்ளது.

இப்படி ஆயுதக் கொள்வனவுக்கும் பெரும் தொகை பணத்தைச் செலவிடும் நாடுகளுக்கு அளிக்கும் உதவியைக் குறைக்கப் போவதாக யப்பான் அறிவித்துள்ளது.

உதவி பெறும் மூன்று பெரிய நாடுகளான சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஆயுத தளபாடங்களுக்கும் கூடுதலாகச் செலவு செய்வதாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது

இந்தியாவும், பாகிஸ்தானும் ஆயுத தளபாடங்களுக்குமிக் கூடிய பணம் செலவிடும் அதேவேளை இரு நாடுகளும் கல்விக்கு 4% சதவிகிதமே வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கியுள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

# 1-ம்தர கிராம உத்தியோகத்தர் சம்பளம் அதிகரிக்கும்

கிராம உத்தியோகத்தர் இரண்டாம் தரத்துக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவது தற்போதைய முறையிலே இருக்கும் அதேவேளை

முதலாம் தரத்துக்கு பதவி உயர்த்தும் போது 01ஆம், 02 ஆம் தர விகிதாசாரம் கருத்திற்கொள்ளப்படும்

கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஆறுக்கு முதல் தர உத்தியோகத்தர் ஒருவர்வீதம் நியமிக்கப்படுவர். முதலாம் தரத்துக்கானகாலியிடங்களில் 80 சதவீதம் மாகாண சபைகள் அரச சேவைக் கமிஷனால் போட்டிப் பரீட்சை மூலமும் மிகுதி 20 சதவீதமும் 17 ஆண்டுகள் சேவையை பூர்த்தி செய்துள்ள ஆகக்கூடிய முழுச்சம்பளத்திட்டத்தைப் பெற்றுக் கொள்பவர்களிடமிருந்தும் சேவை மூப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நிரப்பப்படும்.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் உயர்தரத்தில் உள்ள ஒரு கிராம உத்தியோகத்தர் வீதம் நியமனம் பெறுவர்.

01ஆம் தரத்தில் குறைந்தது மூன்றாண்டுகள் சேவை செய்தவர்களில் 80 சதவீதமானோர் போட்டிப் பரீட்சை மூலமும் மிகுதி 20 சதவீதமானோர் குறைந்தது 20வருடகால சேவையைப் பூர்த்தி செய்து 01ஆம் தரத்தில் குறைந்தது 05 வருடங்கள் சேவை செய்தவர்களிடமிருந்து சேவை மூப்பு அடிப்படையில் அதி உயர் கிராம உத்தியோகத்தர் சேவைக்கு தெரிவுசெய்யப்படுவர். 06

# வாகன போக்குவரத்து வெகுவாகக் குறைந்தது

அம்பாறையில் சமீபத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வாகனப் போக்குவரத்து வெகுவாகக் குறைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தின்போது காது கேட்காது போன பலருக்கு விசேட சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் அம்பாறை வைத்தியசாலையில் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது,

---

### லொஸ்...

ஏஞ்சல்ஸ் சாம்பர் மயமாக காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது வன்முறையில் 42 பேர் பலியாகினர் 2000 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை அமெரிக்காவில் நடைபெற்ற இனக்கலவரங்களை சீனா கண்டித்துள்ளது.

---

### இசை...

புரை ஆற்றும் போது எடுத்தியம்பினார்.

தமிழிசை என்பது தமிழோடு இசைபாடுவது இசை என்பது வாழ்க்கையோடு இணைந்தது இசையில் தான் இறைவன் மயங்கினான் விஞ்ஞானரீதியாகப்பார்க்கும்போது இசை மனிதனது உணர்வை தட்டி எழுப்பக் கூடியதாக உள்ளது

தமிழினத்துக்கு ஒரு பாரம்பரியம் உண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் தலைவராக உள்ள திரு. புதுவை இரத்தினதுரை ஒரு சிறந்த கவிஞராவார் அவரது தலைமையின் கீழ் தமிழீழக்கலைஞர்கள் ஒன்றிணைந்துள்ளது தமிழினத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகும் என்றும் அவர் மேலும்தொடர்ந்து உரையாற்றும் போது கூறினார், 15 49

---

### கிழக்கிலும்...

வடமாகாணத்தில் நடைபெறும் இவ் இசைநிகழ்ச்சியை கிழக்கிலும் விரைவில் நடத்தும் சூழ்நிலையை நாம் உருவாக்க பொதுமக்களாகிய நீங்கள் எமக்கு ஆதரவு தர வேண்டும் என்று மேலும் அவர் கேட்டுக்கொண்டார். 15 49

---

### பாராளுமன்றத்...

யாயினும் தாம் தயாரிக்கும் புதிய தீர்வுத் திட்டத்தில் இணைப்பு குறித்து தெளிவான வரையறை ஒன்றை செய்வதற்கு அவர்கள் அரசுடன் பேச்சு நடத்த விரும்புவதாக பி. பி. ஸி தெரிவித்தது.

மீண்டும் யாழ். செல்ல முன்னர் இணைப்பு குறித்த அரசின் நிலைமையை அறிய புலிகள் குழு விரும்புகின்ற போதிலும் அரசின் நிலைப்பாடு குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை,

# காபூல் மீது ஷெல் தாக்கு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மீது நேற்று குல்புதீன் ஹெக்மத்தையரின் இஸ்பி இஸ்லாம் கிளர்ச்சியாளர்கள் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இச்சம்பவத்தில் ஒருவர் பலியானார் மூவர் காயமடைந்தனர். ஆப்கானின் புதிய அரசை ஹெக்மத்தையர் குழு எதிர்த்து வருவது தெரிந்ததே.

# தையல் பயிற்சி நிலையங்கள்

யாழ்மாவட்டத்தில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் தொகுதி ரீதியில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் நடத்தப்பட்டு வந்த தையல் பயிற்சி நிலையங்களை விரைவில் உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நடத்துவதற்கு மாகாண அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பதினொரு இடங்களில் தொகுதி ரீதியில் நடத்தப்பட்டு வந்த தையல் நிலையங்கள் புதிய திட்டத்தின் கீழ் 14 உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளிலும் நடைபெறவுள்ளன.

இதனால்யாழ்மாவட்டத்தில் மேலும் மூன்று தையல் பயிற்சி நிலையங்கள் புதிதாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. 06

# கறுக்காய்த் தீவில் அறுவடை

பூநகரி கறுக்காய்த்தீவுக் கிராமத்தில் நெல் அறுவடை இப்போது நடைபெறுகின்றது இராணுவத்தினர் மார்ச் நடுப்பகுதிவரை நிலைகொண்டிருந்ததால்மக்கள் அங்குசெல்ல முடியவில்லை இப்போது மக்கள் சென்று இரவுபகலாக அறுவடை செய்து வருகின்றனர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. இரவீந்திரன் அக்கிராமத்தை சமீபத்தில் சென்று பார்வையிட்டார். 49

---

### சிறுவர்களும்...

சிறுவர்கள் தமிழீழ புரட்சிப் பாடல்களைப் பாடுவதற்கு இக்கலைஞர்கள் சிறந்த படைப்புகளை சிறுவர்களும் பாடக்கூடிய வகையில் உருவாக்கி உள்ளனர் இன்றைய சிறுவர்கள் "இந்தமண் எங்கள் சொந்தமண் இதன் எல்லையை மீறியார் இங்கு வந்தவன்" என்று உணர்ச்சி பொங்க புரட்சிப் பாடல்களைப் பாட எமது கலைஞர்கள் தமது கலையில் உதவி உள்ளார்கள்.

இராணுவ அடக்கு முறையிலும் அரசியல் ரீதியிலும் சிறிலங்கா அரசாங்கம் எத்தனை தடைக் கல்லை உருவாக்கினாலும் தமது கலைப் படைப்புக்கள் மூலம் எமது கலைஞர்கள் உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டாக செயற்பட்டு முன்னணியில் உள்ளார்கள்.

குரல்வளைகள் நசுக்கப்பட்டு நெருக்கப்பட்டபோதும் எம்மனால் பாடமுடியும் என்று கூறும் எங்கள் கலைஞர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது என்று அவர் உரையாற்றினார். 15

# வவுனியா மாவட்டக் கடிதம் ஒரு மாதத்தின் பின் கிடைக்கிறது

வவுனியா மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தபால் மூலம் அனுப்பப்படும் தபால்கள் உரியவிலாசதாரருக்கு ஒரு மாதத்துக்கு பின் கிடைப்பதாகத் தெரிய வந்துள்ளது

இத்தபால்கள் வவுனியாவிலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு கொண்டு வரப்பட்டு பின்னரே யாழ் வந்து சேருவதாகவும் தெரியவருகிறது

இதனாலேயே இக்கடிதங்கள் வருவதில் தாமதங்கள் ஏற்படுவதாகத் தெரியவருகிறது

வவுனியாவிலிருந்து அவசர தேவைகள் நேர்முகப்பரீட்சைக்கு அனுப்பப்படும் தபால்களும் பிந்தியே கிடைப்பதாக தெரியவருகிறது 06

# கொழும்பு புறக்கோட்டையில் குண்டு தயாரிக்கும் பொருள்கள்

கொழும்பு புறக்கோட்டைக்குக் கொண்டு வரப்பட்ட கடலை கோணிப்பைகளுக்குள் குண்டு தயாரிக்கும் பொருள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன

லொறியில் ஒருகடைக்கு வந்த இந்தக்கடலைக் கோணியைக் கடையில் உள்ளவர் ஒருவர்திறந்து பார்த்த போது இந்தக்குண்டுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது 06

# ஆப்கானிஸ்தான் தலைநகர் மெல்ல மெல்ல முன்னேறுகிறது

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இப்போது நிலைமை மெல்ல மெல்ல முன்னேறி வருகிறது.

யுத்தத்தின் போது சேதப்படுத்தப் பட்ட மின்சக்தி விநியோகம் பழுது பார்க்கப் பட்டு தலைநகரில் இப்போது மின் சக்தியும் தண்ணீர் வசதியும் கிடைக்கின்றன,

அரசாங்க ஊழியர்கள் மெல்ல மெல்ல வேலைக்குத் திரும்புகின்றனர். இதே நேரத்தில் காபூலில் ஆட்கடத்தலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

# ஹரியானா மாநிலத்தில் பத்துக் கிராமவாசிகள் பலி

இந்தியாவின் வடமாநிலமான ஹரியானாவில் பத்துக் கிராமவாசிகள் நேற்றுக்காலை துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளனர்

இது சீக்கிய போராளிகளின் செயல் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர் சண்டிஹார் நகரிலிருந்து நூறு கிலோமீற்றர் தொலைவில் உள்ள சதுர்ப்பு என்ற கிராமத்தில் கிராமவாசிகள் தூக்கத்தில் படுத்திருந்த போதே கொல்லப்பட்டனர்.

# கொழும்புத்துறை பகுதியில் திருடர்கள் அதிகரிப்பு

கொழும்புத்துறை பகுதியில் திருடர்களின் தொல்லை இரவு நேரங்களில் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

வளன்புரத்தில் சில நாள்களாக இரவு நேரங்களில் வீடுகளுக்குள் புகுந்து திருடர்கள் கோழி, வாழைக்குலை, ஆடு போன்றவற்றைத் திருடிச்செல்வதாக இங்குள்ள மக்கள்தெரிவித்தனர்

அத்துடன் இப்பகுதியில் பகல் நேரத்தில் வீடு ஒன்றுக்குள் புகுந்த திருடர்கள் அங்கு இருந்த ஒரு சோடி பவுண் காப்பையும் திருடிச் சென்றிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. 47

---

# மாதாந்த உதவிப்பணம்

யாழ் மாவட்டத்தின் பிரதேச சபைகள் / உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் மூலம் பொது சன மாதாந்த உதவிப் பணம் சுகரோக மாதாந்த உதவிப் பணம், புற்று நோய், தொழு நோய் போன்றவற்றுக்கான மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் பெயர் முகவரி கொடுப்பனவுத் தொகை சம்பந்தமான விபரங்களை அனுப்பிவைக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண புனர், வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை விவசாய அமைச்சு யாழ் மாவட்ட சமூக சேவைகள் பிரதிப் பணிப்பாளரைக் கேட்டுள்ளது. 25

# விபுலானந்தர் நூற்றாண்டுவிழா

மட்டக்களப்பில் விபுலானந்தர் நூற்றாண்டு விழா நேற்று ஆரம்பமாகியது.

இதனையொட்டி மட்டக்களப்பு நகர் விழாக்கோலம் பூண்டுள்ளது.

---

# போட்டிப் பரீட்சை

சமூக சேவைகள் திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர்கள் 11 ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பான மாதிரி விண்ணப்பப் பத்திரமும் அது தொடர்பான மேலதிக விபரங்களும் 24-04-92 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 06

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 04-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.